முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான்

**எதிர்காலம் குறித்த இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்**

சோபகிருது வருடம் ஆடி மாதம் 21 திகதி முதல்

சோபகிருது வருடம் ஆடி மாதம் 28 திகதி வரை

(06.08.2023 ஞாயிறு முதல் 13.08.2023 ஞாயிறு வரை)

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. பண்பான மக்கள் சமூகம்
   பழுதடைந்து பின்னடைவாகி
   இன்பமென பொய் மாயை வழிதனை
   ஏற்று உழன்று கொண்டிருக்க
2. இருக்கவே இந்தநிலை மாறிட
   இந்தியா தமிழகம் தன்னில்
   வருங்கால பலனாக சோபகிருது
   வரமென நள்ளிதிங்கள் மூவேழுதிகதி மேல்
3. மேலாக எழுநான்கு திகதி வரை
   மேதினியில் நடக்கும் நிகழ்வாக
   கலசமுனியும் வார ஆசிதனை
   கண்டுரைப்பேன் அரங்க ஞானி கேட்க
4. கேட்கவே ஏனிந்த அவலம்
   கொள்கையிலா ஆட்டு மந்தையென
   கட்டம் அறியா அடிமை நிலை
   கழகம் என கலகம் வழி நாளும்
5. நாளும் நாளும் சென்று நின்று
   ஞானவழிகள் இருப்பதை மறந்து
   வாழும் காலம் ஒழுக்கம் கெட்டு
   வாழ்வை தொலைக்கும் வதைநிலை
6. வதைநிலை அகன்று மேவி
   வருங்காலம் எனும் ஒன்றை
   சாதகமாக்கி அழிவென்பதில்லா
   சாதனையாளர்களாக மக்கள் தேறிட

7. தேறிட சன்மார்க்க நெறியான
 தெய்வநெறி ஏற்று வந்திட
 அறிவுத்தெளிவு ஞானம் கூடி
 ஆளுமைகள் இந்தியா தமிழகம்
8. தமிழகம் எத்தகை நிலையென்பதும்
 தலைமையை மாற்றும் சக்தி
 நம்மிடமே உள்ளதுஎனும் ஞானம்
 நம்பிக்கை தெளிவு கூடியே
9. கூடியே ஞானத்தலைமை தன்னை
 குறைவிலா தேர்வு செய்யும்
 மடமையிலா சக்தி மிக்கவர்களாக
 மாண்புள சக்திகளாக மாறி
10. மாறியே இந்தியா தமிழகத்தில்
 மரபுவழி பரம்பரை வழியான தலைமைதனை
 மாற்றியே ஞானத்தலைமை படைப்பர்
 மக்கள் படைகள் ஞானப்படைகளாவர்
 வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

சோபகிருது வருடம் ஆடி மாதம் 21ம் நாள் **06.08.2023** ஞாயிற்றுக்கிழமை முதல் சோபகிருது வருடம் ஆடி மாதம் 28ம் நாள் **13.08.2023** ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள கால நிகழ்வுகள் :

பண்புகள் மிக்கதாய் இருந்த இந்த சமூகம் பண்புள்ள மக்கள் அதிகமாக இருந்த இந்த சமூகம் பழுதடைந்து பின்னடைவை கண்டுமே பொய்யான மாயை வழிகளை தேர்ந்தெடுத்து மாயையே, இன்பம் என மாயையுள் உழன்று கொண்டிருக்கிறதப்பா.

இந்தவித துன்பமாக நிலைகள் எல்லாம் மாற்றம் அடைந்து இந்தியா தமிழகம் மேல்நிலைதனை அடைந்திடவே சோபகிருது வருடம் ஆடி மாதம் 21ம் நாள் **06.08.2023** ஞாயிற்றுக்கிழமை முதல் ஆடி மாதம் 28ம் நாள் **13.08.2023** ஞாயிற்றுக்கிழமை வரை நிகழவிருக்கும் நிகழ்வுகளை ஆறுமுக அரங்க மகா

தேசிகனார் கேட்க வார ஆசி நூலாக அகத்திய மகரிஷி யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

தேச மக்களே பண்புகளை மறந்து ஏனிந்த அவலநிலை உங்களுக்கு வந்தது. கொள்கைகளை மறந்து, கஷ்டத்தில் உழன்று, கஷ்டங்களை அறிந்து கொள்ள முடியாமல் போய் அடிமை நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள்.

கொள்கை இல்லாதவர்களை, கலகம் செய்து வாழ்பவரை நம்பி சென்று நாள்நாளும் அவர்கள் கூறுவதை கேட்டு தவறான வழியில் சென்று, கடைத்தேறிட ஞான வழிகள் இருப்பதையும் மறந்து போய் வாழுகின்ற காலத்திலே ஒழுக்கம் கெட்டு வாழ்ந்து வாழ்கின்ற வாழ்வை தொலைத்து விட்டு பின் துன்பப்படுகின்ற அவல நிலை ஏனப்பா.

இந்தவித துன்பமான நிலைகள் எல்லாம் உங்களை விட்டு அகன்று வாழ்ந்திட வருங்காலம் என்கிறதை சாதகமாகக் கொண்டு இனிமேலாகினும் அழிவில்லாத நிலையை அடைகின்ற சாதனையாளர்களாக மக்கள் எல்லாம் தேறிட வேண்டுமாயின் சன்மார்க்கம் என்கிற தெய்வீக நெறியினை நீங்கள் எல்லாம் ஏற்று கடைப்பிடித்தால் உங்களது அஞ்ஞானம் விலகி அறிவு தெளிவு உண்டாகி ஞானம் பெருகிடும்.

நாட்டின் அவலநிலைகளை மாற்றும் சக்தியே தம்மிடம் உள்ளது என்கிற ஞானமும் நாட்டின் தலைமையையும் மாற்றும் சக்தியும் மக்களாகிய உங்களிடம் உள்ளது என்கிற ஞானமும் பெருகி சரியானவர்களை தேர்வு செய்யும் சக்தி மிக்கவர்களாக மக்கள் மாறி மரபு வழியாக, பரம்பரை பரம்பரையாக தலைமையேற்கும் நிலைதனை மாற்றி தகுதி உடையோரை தலைமைகளாக ஆக்கி ஞானத் தலைமையை மக்கள் படைப்பார்கள் எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–